**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.611/2022 P.W.10**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்துகிருஷ்ணன் | த–பெ | சேதுராஜன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 60/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து சோமநாதபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். கடந்த 10.09.2016 அன்று 23.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளராக வடக்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது மகாலட்சுமி என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 524/2016 பிரிவு 392 இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 8.** பின்னர் வழக்கின் மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பிச்சைபாண்டியன் என்பவர் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் கொடுத்த புகாரில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரிதான். புகாரில் சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் 7.45 மணிக்கு நடைபெற்றது. 7.45 மணியாளது அம்புக்குறி போட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி ஆள் நடமாட்டம் அதிகம் உள்ளது என்றால் சரிதான். பெரியார் சிலை அருகில் போலீஸ் செக்போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். அதில் சம்பவ இடத்திற்கு சற்று தூரம் உள்ளது. புகாரில் செயினை திருடி சென்ற நபர் பெரியார் சிலை வழியாக தான் சென்றார் என்று உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.07 12:36:04 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி